சென்னை வனவிலங்கு காட்சி சாலை.

*134. வினா.—திரு. ம. சங்காலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை வனவிலங்கு கண்காட்சி சாலையில் இருக்கும் வன விலங்குகள், நல்ல முறையில் பராமரிக்கப்படவில்லை என்று அரசின் கவனத் திற்கு கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) சென்னை மாநகராட்சி மிருகக் காட்சிச்சாலையில் உள்ள வன விலங்குகள் சரிவர உணவு அளிக்கப் பட்டு, தக்க மருத்துவ வசதியுடன் செவ்வனே பராமரிக்கப்படுகின்றன.

(இ) வினா எழவில்லை.

திரு. ம. சங்காலிங்கம் : நமது நாட்டிற்கு அண்மையில் வந்த ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மிசிஸ் டிபிள்யூ ஜான்ஸ் என்ற அம்மையார் 4—9—1980-ல் ‘இந்து’ பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் அவர் இந்தியாவில் பல பகுதிகளுக்குச் சென்றதாகவும், திருவனந்தபுரம், ஹைதராபாத் போன்ற பகுதிகளுக்குச் சென்றுவிட்டு, சென்னைக்கு வந்தபோது தான் அதிர்ச்சியுறும் விதத்தில் வனவிலங்குக் காட்சிச்சாலை இங்கே இருப்பதாகவும், வீட்டில் ஒரு பூனைக்கு இருக்கும் அளவுக்குக் கூட வசதியில்லாமல் அங்கே சிங்கங்கள் இருக்கின்றன என்றும் சிறுவர்கள் பார்த்து மகிழ்ச்சியுறும் விதத்தில் அந்த விலங்குகள் இல்லையென்றும் சொல்லி அவைகளை வேறு இடத்திற்கு அனுப்பலாமே என்று அந்த அம்மையார் ஆலோசனை வழங்கியிருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ? அதுபற்றி எந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 16—2—1979 ஆணையின்படி இந்த மிருகக் காட்சிசாலையை சென்னையிலே இருந்து வண்டலூருக்கு மாற்ற வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது. இங்கே இருக்கக்கூடிய 103 மிருகங்களும், 96 பறவைகளும் மற்றும் ஊர்வன ஜந்துக்களும் வனத் துறையின் மூலமாக எவ்வளவு சீக்கிரமாக வண்டலூருக்கு மாற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மாற்றப்படும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1981 மார்ச் 10]

திரு. ம. சங்கரலிங்கம்: இப்போது இந்த மிருகக் காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றுவது மிகவும் இன்றியமையாதது. அதை விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, சிங்கங்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கூண்டில் ஒரு சிங்கத்திற்கு எவ்வளவு சதுர அடி இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஒரு சிங்கத்திற்கு உணவுக்காக ஒரு நாளைக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எவ்வளவு சதுர அடி இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. மனிதர்களுக்கே பல இடங்களிலே போதுமான இடமில்லை என்ற நிலைதான் இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: இந்த மிருகக்காட்சி சாலை வண்டலூருக்கு மாற்றப்படும் என்ற செய்தி பல ஆண்டுக காலமாக காதிலே விழுந்துகொண்டிருக்கிறது. வண்டலூரில் இதுதொடர்பாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, இதற்குத் தேவையான நில ஆர்ஜிதங்கள், மற்றும் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுவிட்டனவா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: 16—2—1979 லே ஆணையிடப்பட்டு வண்டலூரிலே அதற்குத் தேவையான இடம் எடுக்கப்பட்டது. மிருகக் காட்சி சாலை அமைக்க வேண்டும் என்ற நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது மிருகக் காட்சி சாலை இருக்கும் இடம் இரயில்வேக்குத் தேவைப்படுவதால், இன்னும் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

THIRU J. M. MIAKHAN: It is learnt that the smoke from the railway engines in the Central Station affects the health of the animals there and it is said that they are suffering from T.B. Is the Hon. Minister aware of this and will he kindly take steps to rectify the situation and see that the animals are healthy?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதுபற்றி குறிப்புகள் இப்போது என்னிடத்திலே இல்லை. வண்டலூருக்கு மாற்றப்படுவதன் மூலம் இவைகள் எல்லாம் தவிர்க்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வன விலங்குகளின் கணக்கைச் சொன்னார்கள். அந்த மிருகங்களில் நம்மைப் பார்த்து பயப்படும் மிருகங்கள் எத்தனை, நம்மை பயமுறுத்தும் மிருகங்கள் எத்தனை? எவை அதிகம்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இரண்டுவகை மிருகங்களும் அங்கே உண்டு. ஆனால், இப்போது மனிதர்களைக் கண்டுதான் மிருகங்கள் பயப்படுகின்றன.

திரு. ம. சங்கரலிங்கம் : கல்வி சம்பந்தப்பட்டவரையில், சிறுவர்கள் கல்வி பயில்வதற்கு, அவர்களுடைய ஒருசில பாடப் பளுவைப் போக்குவதற்கு மிருகக்காட்சிசாலை இன்றியமையாததாக இருக்கிறது. வண்டலூரிலே அமைக்கப்படும் இந்த மிருகக்காட்சி சாலை திறந்த வெளியாக மிருகங்களை வைக்க வசதியோடு இருக்கிறதா? இல்லை அங்கும் அடைக்கப்பட்டு வைக்கும் நிலைதான் இருக்கிறதா? திருவனந்தபுரம் மற்றும் ஹைதராபாத்தில் இருப்பதுபோன்று மிருகங்கள் திறந்த வெளியில் போய்வரும் வசதியோடு அங்கே அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது வனத் துறைக்கு சம்பந்தப் பட்ட விஷயமானதால், இதுபற்றி வனத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. எப்படிப்பட்ட மிருகக்காட்சி சாலை அமைக்கப்போகிறார்கள் என்ற குறிப்புகள் எல்லாம் அந்தத் துறையிலே இருக்கின்றன.

சேலம் நகராட்சி அலுவலகக் கோப்புகள்.

* 135. வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சேலம் நகராட்சி அலுவலகத்திலுள்ள சில முக்கியமான கோப்பு கள் திருடப்பட்டு, விற்கப்பட்டதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) சம்பந்தப்பட்ட சேலம் நகராட்சியின் அலுவலர்களும் மற்றும் அதி காரிகளும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. களவாடப்பட்ட கோப்புகளில் பல கைப்பற்றப்பட்டன. கிடைக்கப்பெறாத கோப்புகள் புதுப்பிக்கப்பட்டு வரு கின்றன.

திரு. ம. சங்கரலிங்கம் : சேலம் நகராட்சியிலிருந்து முக்கியமான ஃபைல்கள் எல்லாம் களவு செய்யப்பட்டு விற்கப்பட்டன என்ற செய்தி அரசின் கவனத்திற்கு எப்போது வந்தது? எவ்வளவு ஃபைல்கள் களவு